[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 7

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 9—9—1991 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—11—1987 ஆம் நாளிட்ட 1672 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக் கப்பெற்றது.]

23. எள், முந்திரி, நெல், மிளகாய், நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவற்றினை பொறுத்தவரை இளையாங்குடி அங் காடிப் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள வருவாய் கிராமங் களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து 25—11—1989 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

24. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்கு தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 14-8-1990 ஆம் நாளிட்ட 886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

25. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக் கடைகள் (தள்ளுபடி செய்தல் மற்றும் திருப்பியளித்தலுக்கான சிறப்பு முன்னேற்பாடுகள்) விதிகளை இயற்றுவது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25-9-1990 ஆம் நாளிட்ட 916 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி விக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட் டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1991 செப்டம்பர் 7]

26. உள் துறையினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HO/1545/90, நாள் 16—2—1990-ஐ ரத்து செய்வது குறித்து உள் துறையின் 26—10—1990 ஆம் நாளிட்ட 2364 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

28. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

29. தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

30. அரசு ரப்பர் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.